பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 20 (5—11—68) செவ்வாய் ★ வெளியூர்: ஐப்பசி 21 (6—11—68) புதன் [இதழ்: 116

தேர்தல் செலவு ரூ. 750 கோடி!

நியூயார்ச், நவ. 5—

இன்று அமெரிக்காவில் நடைபெறும் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் செய்துள்ள மொத்தச் செலவு ரூ. 150 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கில் வராத தொகையையும் சேர்த்தால் ரூ 750 கோடியைத் தாண்டியிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

நாடு எதிர்பார்க்கும் நன்னாள்!

நாளை அண்ணா வரும் பொன்னாள்!

சென்னை, நவ. 5---

நாமெல்லாம் காணத் துடித்துக் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாளை காலை 8-30 மணிக்குச் சென்னை வந்தடைகிறார்கள்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில், சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

விமான நிலையத்திற்குள் செல்வதற்கான அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களே விமான நிலையத்திற்குள் செல்லலாம். முக்கியமானவர்களுக்கு மட்டுமே அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது.

விமானத்திலிருந்து இறங்கியதும் அண்ணா அவர்கள், திறந்த காரில் அமர்ந்து, நுங்கம்பாக்கத்தில் உள்ள தமது இல்லத்துக்குச் செல்வார். (மழை இருந்தால் மூடிய காரில் அமர்ந்து செல்வார்.)

வழியில், சைதாப்பேட்டை மர்மலாங் பாலத்திற்கு அருகில் சைதைத் தோழர்கள் பந்தல் அமைத்து பாண்டு வாத்தியங்கள் முழங்க வரவேற்பளிக்க ஏற்பாடு செய்துள்ளனர். முரசொலி மாறன் எம்.பி. அங்கிருந்து அண்ணாவை வரவேற்பார்.

நெடும் பயணத்தின் விளைவாகக் களைப்புற்று வந்து சேரும் அண்ணா அவர்கட்கு மாலையணிவிக்கவோ, கைகுலுக்கவோ யாரும் முயலவேண்டாம் என்று ஏற்கனவே அமைப்புச் செயலாளர் கேட்டுக் கொண்டிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

அவசரச் சட்டத்தின் மூலம் இந்தித் திணிப்பு

அரியானா ஆளுநரின் நடவடிக்கை

சந்திகார், நவ. 5—

"அரியானா மாநில அரசு அலுவல்களில் இந்தியையே பயன்படுத்த வேண்டும்" என, மாநில ஆளுநர் பி. என். சக்கரவர்த்தி, ஓர் அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளார்.

இச்சட்டப்படி, தேவநாகரி வரிவடிவத்தில் எழுதப்படும் இந்தி, அரியானா மாநில அரசின் அலுவல்களில் 1969 சனவரி 26 முதல் பயன்படுத்தப்படவேண்டும்.

விதிவிலக்குத் தரும் அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் போக மீதி அலுவல்கள் அனைத்தும் இந்தியிலேயே ஆற்றப்பட வேண்டுமாம்.

தமிழக அரசின் பரிசுச் சீட்டுக்கு அமோக ஆதரவு

பத்து வரிசைகட்கு மேலும் விற்பனை செய்யக் கோரிக்கை

கள்ளச் சந்தையில் விற்றால் கடும் நடவடிக்கை

சென்னை நவ. 5—

ஏஜெண்டுகளுக்கு விற்பனை செய்வதற்காக 'ஓ' வரிசை பரிசுச் சீட்டுகள் கருவூலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இம்மாதம் 20-ம் நாள் இரண்டாவது குலுக்கல் நடைபெறவிருக்கிறது. அதற்கு 'பி', 'கியூ', 'ஆர்' ஆகிய மூன்று வரிசைகளும் விரைவில் விற்பனைக்கு அனுப்பப்படும்.

இந்த மூன்று வரிசைகளையும் சேர்த்து மொத்தம் 10 வரிசைகள் இரண்டாவது குலுக்கலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பரிசுச் சீட்டுக்கள் பெரும் அளவில் விற்பனை ஆகின்றன. 10 வரிசைகளுக்கு அதிகமாகவும் இரண்டாவது குலுக்கலுக்கு விற்பனை செய்யவேண்டும் என்று கோரப்படுகிறது.

பரிசுச் சீட்டுக்களை கள்ளமார்க்கெட்டில் விற்பதாக வந்துள்ள புகார் பற்றி விசாரித்ததில், 'அதிகாரபூர்வமான ஏஜெண்டுகளே இதற்குப் பொறுப்பாளியாக்கப்படுவார்கள்' என்று தெரிகிறது.

திருச்சியில் ஒரே வரிசையில் ஒரே எண்ணைக் கொண்ட இரு பரிசுச் சீட்டுகள் இருப்பது பற்றி திருச்சி கலெக்டர் அரசுக்குத் தெரிவித்தார்; அது வெறும் அச்சுப் பிழைதான். பரிசுச் சீட்டு எண்களில் இதற்குத் தேவையான திருத்தம் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

விவசாயிகட்கு ரூ. 5 இலட்சம் கடன்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி வழங்கினார்

தருமபுரி, நவ. 5—

தருமபுரியில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் கலந்து கொண்ட வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், ரூ. 5 இலட்சத்தை விவசாயிகளுக்குக் கடனாக வழங்கினார்.

உயிரே! வா!

[புலவர் பொன்னிவளவன்]

நடமாடும் திருக்குறளே! எங்கள் நெஞ்சில்
நடமாடும் உயிர்நினைவே! செய்தி ஏட்டில்
படமாகப் பார்த்திருந்தோம்; மீண்டும் நாங்கள்
பார்த்தமுகம் பார்த்திடநீர் வருகின் றீர்கள்!
கடல்பொங்கும், முழுநிலவைக் கண்டால்! மக்கள்
கடல்பொங்கும் தமிழ்நிலவே, உம்மைக் கண்டால்!
சுடர்நோக்கும் பூ சூரிய காந்தி! ஞானச்
சூரியன்நீர்! எங்களுக்குக் காந்தி நீர்தான்!

காந்திமுகம் காந்தமுகம் காண்ப தற்குக்
காத்திருக்கும் கண்மலர்கள் கோடி! கோடி!
நீந்திவரும் நீர்இருக்கும் விமானம் வானில்;
நின்றிருப்போம் நாங்கள் அதை நாடி! நாடி!
தீந்தேனும் உம்பேச்சைத் தேடித் தேடி!
தினம்ஏக்கம் கொண்டிருந்தோம் வாடி! வாடி!
சாந்தமுகம் படைத்தவரே! ஆடிப் பாடிச்
சந்திப்போம்! வரவேற்போம் கூடிக் கூடி!

இனிக்காது இருக்காது நீங்க ளின்றேல்;
இனிக்காது இனிக்காது இருக்கா தண்ணா!
கனிவாயால் கனிவாய்நீர் பேசும் போது
கவலைஉம் விமானத்தைப் போல்ப றக்கும்!
பனிக்காலம் நமைக்காக்கத் தேவை போர்வை!
பகையடக்கி எமைக்காக்க நீங்கள் தேவை!
மணிக்கணக்கில் காத்திருப்போம்! தமிழி னத்தின்
மனக்கணக்கின் தனிமுடிவே! வருக நீங்கள்!

பயிர்வளர்க்கும் காவிரிநீர்! தமிழ்வ ளர்க்கும்
பண்பாட்டுக் காவிரிநீர்! வசந்தம் வந்தால்
குயில்பாடும்! நீர்வந்தால் எங்கள் நெஞ்சம்
கும்மாளம் போடும்! நற் கவிதை பாடும்!
மயில்ஆடும் கார்காலம் வந்தால்! உங்கள்
மதிமுகத்தைக் கண்டுமனம் மகிழ்வில் ஆடும்!
உயிர்தனியாய் உடல்தனியாய் இருக்க லாமா?
உயிரே! வா! ஆவலுடன் வரவேற் கின்றோம்!

கம்பியில்லாத் தந்தி வசதி

திருச்சி, நவ. 5—

தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் போலீசு சப்-டிவிஷன்களுக்கிடையிலும், 'ஒயர்லெஸ்' கருவிகள் மூலம் இணைப்பு ஏற்படும்.

நகராட்சிகளுக்கு நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முன்பே போலீசு நிலையங்கள் இவ்வசதியைப் பெற்றுவிடும்.

போலீசு நிலையங்கள் இக்கருவியின் பலனால் மாவட்டப் போலீசுத் தலைமை நிலையங்களுடனும், தமிழகப் போலீசுத் தலைமை நிலையத்துடனும் தொடர்புகொள்ள இயலும்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட விளம்பர அதிகாரி

பூ. கணேசன் நியமனம்

சென்னை, நவ. 4—

தமிழக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட விளம்பர அதிகாரியாக திரு. பூ. கணேசன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை, திரு பூ. கணேசன், காசநோய் ஒழிப்புத் திட்ட விளம்பர அதிகாரியாக இருந்துவந்தார்.

'தமிழக அரசு கோரிக்கை நியாயமானதே'

'மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் தரப்படவேண்டும்'

நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் அனுமந்தையா கருத்து

சென்னை, நவ. 5---

"மாநில அரசு -- மத்திய அரசு உறவுப் பிரச்சினையில் தமிழக அரசு பொறுப்பான கருத்தைக் கொண்டிருக்கிறது; 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும்' என்று தமிழக அரசு கேட்டபோதிலும், இந்தியாவின் ஒற்றுமை சீர்குலையும்வண்ணம் அவர்கள் எதுவும் கோரவில்லை."

இவ்வாறு, நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் திரு. கே. அனுமந்தையா, செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டிக் கூறினார்.

சென்னைக்கு வந்துள்ள அவரிடம், மாநில அரசு -- மத்திய அரசு உறவுபற்றிச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் அளித்துள்ள பதிலாவது:—

"திறமையாகவும், துரிதமாகவும் நிர்வாகம் நடைபெறுவதற்கு மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

அதிக அதிகாரங்கள் கொடுப்பதற்காக அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யவேண்டியதில்லை என்றே நான் கருதுகிறேன். அதிக அதிகாரம் கொடுப்பதற்குப் பாதகமான அம்சம் ஏதாவது அரசியல் சட்டத்தில் இருந்தால், அதுபற்றிப் பரிசிலிக்கலாம்.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைப் பொறுத்தவரையில், மாநில மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்றே சிபாரிசு செய்துவருகிறது.

கடந்த இருபது ஆண்டுகளாக மத்திய அரசு, நிர்வாக அதிகாரங்களைத் தன்னிடம் குவித்துவைத்துக்கொண்டிருக்கிறது; இந்தப் போக்கு அவ்வளவு நலம் பயப்பதல்ல! இந்த மனப்போக்கு மாற வேண்டும்!"

நம்நாடு
இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஐப்பசி 20 (5—11—68) செவ்வாய்

வருக! வருக! அண்ணா வருக!

அறிஞர் அண்ணா அவர்கள், என்றும்போல் புன்முறுவலுடனும் மகிழ்ச்சி ததும்பிய ஒளி முகத்துடனும் மீண்டும் நம்மிடை வருகின்றார்.

என்று காண்போம், நமது அரசியல் குடும்பத்தின் மூத்த அண்ணனை என, நாமெல்லாம் ஏங்கிக்கிடந்தோம்.

எப்பொழுது கேட்போம், அவருடைய பொருள் செறிந்த அன்பும் பண்பும் கலந்த நல்லுரையை எனப் பெரும் ஏக்கத்துடன், எதிர்பார்த்துக்கிடந்தோம்.

என்று வருவார் - எப்பொழுது நம்முடன் நடமாடுவார் - நல்வழியில் அழைத்துச் செல்லுவார் என எதிர்பார்த்திருந்தவர் ஏராளம் ஏராளம்,

நாம் அனைவரும் எதிர்பார்த்திருந்தவண்ணம், நம் குடும்பத்தின் மூத்த மகன், முன்னேற்றக் கழகத்தின் தனிப்பெருந் தலைவர், தமிழ்த் தாயின் தலைமகன் உலக உத்தமர் காந்தியடிகளின் இணையற்ற வாரிசு, சனநாயகப் பாதுகாவலர், இதுபோன்ற பற்பல சிறப்புக்குரிய நம் அண்ணா அவர்கள், உடல்நலம் பெற்று, மீண்டும் தமிழுக்கும், மனித சமுதாய மேம்பாட்டிற்கும் ஊக்கத்துடன் உழைத்திட, நாளை வருகின்றார்.

ஆறு கிழமைகளுக்கு முன்னர், நமது ஒப்பற்ற வழிகாட்டி அண்ணா அவர்கள் பெற்றிருந்த உடல் நலிவை, நினைத்து நினைத்துப் பட்ட வேதனைக்கு எல்லை ஏது? நம் கண்கள் சிந்திய கண்ணீருக்கு அளவுதான் உண்டா?

அண்ணா உடல் நலம் பெற்று, மீண்டும் தாயகம் திரும்புதல் வேண்டும் என, இலட்சோபலட்ச மக்களின் இதயம் வாழ்த்தியது.

மதச் சார்புடையவர்கள், தங்கள் தங்கள் நம்பிக்கைக்கேற்ப, தேவாலயங்களில், அண்ணா உடல்நலம் பெற்று வீடு திரும்பிட வேண்டும் என்று பல்லாயிரக்கணக்கானவர் பிரார்த்தனை செய்து கொண்டனர்.

அண்ணாவின் உடல் உறுப்பின் முக்கிய பகுதி பழுதுபட்டிருக்கிறது என்பதை மருத்துவர்கள் ஆராய்ந்து அறிந்து கூறியதைக் கேட்டதும், எண்ணத் தொலையாதோரின் உள்ளங்கள் குமுறின.

அண்ணா அவர்களுக்கு வந்துள்ள பிணிக்கு, அமெரிக்காவில் தான் முதல்தரமான சிகிச்சை கிடைத்திடக்கூடும் என்ற செய்தியைக் கேட்டவர் பல்லோர் திடுக்கிட்டனர்; திகைப்படைந்தனர்; இருந்திட்டாலும், அண்ணா குணம் பெறுவார் என்ற நம்பிக்கையும் கொண்டனர்.

'அண்ணா அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது; அண்ணா ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார்; தாமாக உட்காருகிறார்; நடமாடுகிறார்; பழக்கமான உணவை உட்கொள்ளுகிறார்; உடல் தேறிவருகிறது; உற்சாகமாக உரையாடுகிறார்' என்ற இனிக்கும் செய்திகள் கிடைத்திட்ட பொழுதுதான், விமான நிலையத்தில் சோகமே உருவாக நின்று, அண்ணாவை வழியனுப்பிய அனைவரும், மறுபடியும் உணர்வு பெற்றனர்.

அண்ணா அவர்களுக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர் மில்லர் அவர்களை, தமிழ் மக்கள் என்றும் மறவார்.

தமிழும், தமிழ்நாடும், தமிழ் மக்களும் உள்ள வரையில், டாக்டர் மில்லர் அவர்களின் திருநாமமும் நீடித்து நிலைத்திருக்கும்.

நம்முடைய குடும்பத்தின் தலைமகனை, நமது வழிகாட்டியை, நமது ஒப்பற்ற தலைவரை, நம்மிடை மீண்டும் வலிவுடனும் பொலிவுடனும் ஒப்படைத்து, தமக்கெனப் பெரும்புகழைத் தேடிக்கொண்ட டாக்டர் மில்லர் அவர்களைப் புகழ்ந்து பாராட்டுதற்கு, இன்று தமிழ் மொழியில் இருந்திடக்கூடிய சொற்கள் போதா. செயற்கரிய அரும்பணியை ஆற்றியுள்ள அமெரிக்க மருத்துவர் மில்லர் அவர்களுக்கு, நமது வாழ்த்தும் வணக்கமும்.

அண்ணா அவர்கள், அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நேரத்திலும், அவருடனே நிழல்போல் உடன் சென்று, உடனிருந்து, உடன் திரும்பும் கழகக் கண்மணிகளான செழியன் அவர்களையும், இராசாராம் அவர்களையும், எவ்வளவு பாராட்டினாலும் தகும். அண்ணா அவர்களே, 'கண்ணை இமைகள் காப்பதே போல் செழியனும் இராசாராமும் என்னைக் காத்துவருகிறார்கள்' எனச் சிறப்பித்துப் பாராட்டியிருக்கின்றபொழுது, அண்ணாவுடனிருந்து அவ்விருவரும் புரிந்துள்ள தூய்மையான தொண்டைப்பற்றிச் சிறப்பிப்பதற்கு என்ன இருக்கிறது?

அண்ணாவின் வரலாற்றில், பெறுதற்கரிய சிறப்பிடத்தை செழியனும் இராசாராம் அவர்களும் தங்களுக்குரிமையாக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் இருவரும் தமிழ் மக்களின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவர்.

அண்ணா அவர்கள், மீண்டும் நம்மிடை வந்துவிட்டார்; அவருடைய அன்புரையை எப்பொழுதும்போல் கேட்டிடப் போகிறோம்; அரசியல் வாழ்வில் அவர் நம்மை இனியும் நடத்திச் செல்லுவார் என்ற நமது நம்பிக்கையில் உண்மையும் உள்ளது; நியாயமும் இருக்கிறது.

ஆனால், அண்ணா அவர்கள், உடல் வலிவைப் பொறுத்தவரையில், இன்னும் முன்னாள் அண்ணாவாக ஏற்றம் பெற, மேலும் சில திங்கள் தேவைப்படுகிறது. எனவே, நம்முடைய அன்புத் தொல்லைக்கு அண்ணா அவர்கள் முன்போல் உள்ளாக்கிவிடக்கூடாது.

அண்ணா அவர்களுக்கு, முழு ஓய்வை நமது தோழர்கள் அளித்திடத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

இது குறித்து, செழியன் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற பொருள் நிரம்பிய கருத்தை, நமது தோழர்கள் வெறும் வேண்டுகோளாகவோ மரபு பற்றிய உபசார மொழியாகவோ மதித்திடக்கூடாது.

அது வருமாறு:—

"அண்ணா திரும்புகிறார் முகமலர்ச்சியுடன்; ஆனால், அவருடைய உடல்நலம் பழைய வலிவான நிலைக்கு இன்னும் திரும்பவில்லை! ஓய்வு தேவை என்கிறார் டாக்டர்! தக்க உணவும், அந்த உணவையும் குறிப்பிட்ட நேரங்களில் தவறாது உட்கொள்ள வேண்டும் என்கிறார்! நடைபெற்ற அறுவைச் சிகிச்சைக்குப் பின், அண்ணா அவர்களால் உணவு அதிகமாக உட்கொள்ள முடிவதில்லை—முன்பே அவர் அதிகம் சாப்பிடமாட்டார். இப்பொழுது அந்தச் அளவும் குறைந்துவிட்டது! உணவின் அளவு குறைந்துவிட்டதால், உணவின தரத்தைப் பொறுக்கி, தக்க உணவாக்க வேண்டும்; இரண்டாவதாக, சாப்பிடும் தடவைகளை அதிகமாக்க வேண்டும்! மூன்று வேளை என்பதற்குப் பதிலாக, ஆறு வேளை உணவு கொள்ள வேண்டும் என்று டாக்டர் கூறுகிறார்!

ஓய்வும், தக்க உணவும், வேளை தவறாத தன்மையும், உடல் வலிவு இடம் தருமளவு தமது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நிலையும் - ஆகிய இவற்றை கடைபிடித்தால், உடல் வலிவுபெற ஆறு திங்களாவது ஆகும் என்று டாக்டர் மில்லர் அவர்களும், டாக்டர் சதாசிவம் அவர்களும் கூறுகிறார்கள்!

மருத்துவ வல்லுநர்கள் தமது திறமையால் அவரைக் காப்பாற்றியுள்ளனர்; மருத்துவமனையின் உயர்தரக் கண்காணிப்பு மிக விரைவாக இரணத்தை ஆற்றி, நடமாட வைத்து, வெளியில் அனுப்பி வைத்துள்ளது. அவர் உடல்நிலை வலிவடைய சில முறைகளைக் கண்டிப்பாகக் கடைபிடிக்கவேண்டும் என்று வகுக்கப்பட்டுள்ளது!

தமிழகத்துக்கு அண்ணா அவர்கள் திரும்பியதும், அந்த வரைமுறைகளைச் சரியானபடி நிறைவேற்றுவதில் நாம்தான் உதவவேண்டும் - ஒத்துழைக்கவேண்டும்!

முப்பத்தைந்து ஆண்டுகளாக, ஊருக்கு ஊர், கூட்டத்துக்குக் கூட்டம், பிரச்சினைக்குப் பிரச்சினை, அண்ணா அவர்களை அலைக்கழித்ததுபோல், இனி நடைபெற முடியாது!

"ஒரு நாளில் 30 கூட்டம், கடைசிக் கூட்டம் காலை 4-மணிக்கு நடைபெற்றது!" என்று முன்பெல்லாம் கூறுவது அப்பொழுது பெருமையாகக்கூட இருந்தது. கூட்டங்களின் வரிசையை, அளவை, பெருமையைப்பற்றி எல்லோரும் கணித்தார்களே தவிர, அண்ணாவின் உடல்நலத்தைப்பற்றிக் கவனிக்க மறந்துவிட்டோம்!

இப்பொழுதுகூட "ஐந்து நிமிடம் இருந்தால் போதும்; இரண்டு வார்த்தை கூறினால் போதும்!" என்று அண்ணா அவர்களை அழைக்கத் தோன்றும்.

"அண்ணா வாழ்க!" என்று இதயத்தின் அடியிலிருந்து உண்மையாக ஒலிக்கின்ற நாம், அவருடைய வாழ்வு செம்மைப்பட உதவவேண்டும்!

நமது 'பாசம்' அவருக்குப் 'பார'மாக ஆகக்கூடாது!

நமது ஆரவாரம் அவருக்கு ஆயாசத்தைத் தரக்கூடாது!

நமது களிப்பு அவருடைய உடல் நலிவுக்குக் காரணமாக ஆகக்கூடாது!

அண்ணா அவர்கள் தாட்சண்யத்துக்கு—அன்புக்குக் கட்டுப்பட்டவர்! தமது உடல்நிலை இடம் தரவில்லை என்றால்கூட வெளியில் காட்டிக்கொள்ளாமல் கழகத் தோழர்களிடம் தம்மையே ஒப்படைத்துவிடுவார்!

ஆக அண்ணா அவர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்றால், நாம்தான் நம்மை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்! விதிக்கப்படும் கட்டுப்பாட்டுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்!

ண்ணாவின் உண்ணும் நேரம், ஓய்வுநேரம், உறங்கும் நேரம்—இவற்றைப் பற்றி நாம் கவனமாக இருக்கவேண்டும். அண்ணா அஅவற்றை மறந்துவிடுவார்; நாம்தான் நினைவுபடுத்தி, அது நிறைவேறும் வகையில் விலகிச்செல்ல வேண்டும்! கண்காணிப்பாளருடன் ஒத்துழைக்க வேண்டும்.

அண்ணாவின் உடல் நலத்துக்கு மட்டுமல்ல, உள்ள அமைதிக்கும் தக்க வகையில் நமது நடவடிக்கைகள் அமைய வேண்டும்!"

அண்ணா அவர்களை வருக; வருக என அகமும் முகமும் மலர வரவேற்கின்ற பல்லாயிரம் தமிழ் மக்களுடனும் நாமும் பங்குகொள்ளுகின்றோம். அவர்கள் அனைவருடனும் இணைந்து நாமும் மகிழ்கின்றோம்.

—கா. க.

தமிழக அரசுப் பரிசுச் சீட்டு

சிறைக் கைதிகளும் வாங்க அனுமதி

திருச்சி, நவ. 2—

தமிழக அரசின் பரிசுச் சீட்டு வாங்குவதில் சிறைக் கைதிகள்—அதிலும் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் அதிக அக்கறை காட்டுவதன் காரணமாக அவர்கள் பரிசுச் சீட்டு வாங்கச் சிறை அதிகாரிகள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

திருச்சி மத்திய சிறையில் உள்ள பல கைதிகள் தங்களைப் பார்க்கவரும் உறவினர் அளிக்கும் பணத்தைக் கொண்டு பரிசுச் சீட்டுகளை வாங்க அதிகாரிகளிடம் அனுமதி கேட்டார்கள். பணத்தை அதிகாரிகள்தான் வைத்திருப்பது வழக்கம். இப்படி அனுமதி கேட்டவர்களில் 60 பேர் ஆயுட் கைதிகள்.

இவர்கள் பரிசுச் சீட்டு வாங்க அரசு அனுமதியளித்துள்ளது.

அறியாமையே காரணம்!

"நல்லவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டும்கூட சீர்திருத்த இயக்கங்கள் தோல்வியுற்றால் அறியாமையே இதற்குக் காரணம்."

—காந்தியார்

தமிழகத்தின் திட்டத்திற்கு வல்லரசுகள் முட்டுக்கட்டை

இலண்டன், நவ. 5—

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா இதுவரை கையெழுத்திடாததால், சென்னைக்கு அருகே கல்பாக்கத்தில் அமைக்கப்படவிருக்கும் அணு மின்சார நிலையத்திற்கான சாதனங்கள் எளிதில் கிடைக்காதபடி அணு வல்லரசு நாடுகள், இந்தியாவுக்குத் தொல்லைகள் தரக்கூடும் என்று இங்குள்ள நோக்கர்கள் கருதுகிறார்களாம்.

வர்த்தக ஒப்பந்தம்

புதுடில்லி, நவ. 1—

இந்தியாவுக்கும் போலந்து நாட்டுக்கும் இடையே நீண்டகால வர்த்தகம், பற்றுவரவு ஒப்பந்தம் ஒன்று வார்சாவில் கையெழுத்தாகியது. வர்த்தகத் துணை அமைச்சர் திரு. முகமது ஷஃபிகுரேஷியின் தலைமையில் இந்திய வர்த்தகக் குழு போலந்து வர்த்தகக் குழுவுடன் நடத்திய பேச்சுக்களின் முடிவில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியது. போலந்து குழுவின் தலைவராக அந்நாட்டு வெளிவர்த்தகத் துணையமைச்சர் டி. ஓலைச்சோவிஸ்கி பணியாற்றினார்.

திரைப் படத்தில் காந்தி

தமிழிலும் தயாராகிறது

புதுடில்லி நவ 4—

காந்தி நினைவு நிதி நிறுவனம் திரைப்படப் பிரிவின் ஒத்துழைப்புடன் தயாரித்த 'மகாத்மா' என்னும் முழு நீள வரலாற்றுப் படத்தின் பதினான்கு சுருக்க வடிவங்களைத் தமிழ், வங்காளி, ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் திரைப்படப் பிரிவு தயாரித்துவருகிறது. முதலாவது படம் அடுத்த மாதம் வெளியிடுவதற்குத் தயாராகும்.

இந்த 14 படங்களில் ஐந்து படங்கள் சுமார் 2,000 அடி நீளமுள்ளவையாக இருக்கும். இவற்றைத் திரைப் படப் பிரிவு வழக்கம் போல் வெளியிடும். மற்ற ஒன்பது படங்களும் இரண்டாயிரம் அடிக்கு மேல் நீளம் உள்ளவையாக இருக்கும். இவற்றைத் திரையிடுவதற்குத் திரைப் படம் காட்டுவோரையும், அவர்களின் சங்கங்களையும் பொதுமக்கள் தகவல் தொடர்பு பிரிவுக்கான துணைக் குழு அணுகும். நீண்ட காந்தி படங்களுக்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட திரைப் படங்களைத் திரையிடுவதிலிருந்து இவர்களுக்கு விலக்கு அளிக்குமாறு மாநில அரசாங்கங்களைத் துணைக் குழு கேட்டுக் கொள்ளும்.

இந்தியாவின் இன்றைய வாழ்க்கைபற்றி காந்தியார் என்ன கூறுகிறார் என்பதுபற்றிய பல படங்களைத் தயாரிப்பதற்காகத் திரைப் படப் பிரிவின் தனி அமைப்பு ஒன்றை நிறுவுகிறது. இந்தப் படங்கள் பெண்களின் நலம், தாழ்த்தப்பட்டோர் நலம், இளைஞனும் கல்வியும், கைவினைப் பொருள்கள், கிராமப் பொருளாதாரம் ஆகியவை பற்றியதாக இருக்கும்.

திரைப் படப் பிரிவு வாரந்தோறும் வெளியிடும் இந்தியச் செய்திக் கதிரின் இறுதியில் காந்தியின் அறிவுரைகள் சேர்க்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு அக்டோபர் 4-ம் நாள்முதல் இவ்வாறு செய்யப்பட்டுவருகிறது.

'போர்பந்தர்—காந்தியின் பிறப்பிடம்' என்னும் படத்துக்கான காட்சிகளைத் திரைப் படப் பிரிவு எடுத்து முடித்திருக்கிறது. இந்தப் படம் இப்பொழுது எடிட்டிங் கட்டத்தில் இருக்கிறது.

சீனவைச் சுற்றி எதிர்ப்பு வளையமாம்

உருவாக்க இந்தியாவுக்கு இரஷ்யா உதவுகிறதாம்!

ஹாங்காங், நவ 5—

"இரஷ்யாவுடன் சேர்ந்து கொண்டு, செஞ்சீனவுக்கு இந்திய அரசு, இராணுவரீதியாகச் செய்துவரும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன" என்று, கம்யூனிஸ்டுச் சீன செய்தி நிறுவனம் கூறியிருக்கிறது.

'துர்நோக்கமுள்ள நடவடிக்கைகளை' நிறைவேற்றுவதற்காக அண்மையில் இந்திய இராணுவத் தூதுக்குழு ஒன்று, பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங் தலைமையில் மாஸ்கோவுக்குச் சென்றிருந்தது என்றும் அது கூறியிருக்கிறது.

"இந்தியாவைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ளவும், ஆசியாவில் நவீன காலனி ஆதிக்க முறையைக் கடைபிடிக்கவும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து சீனவைச் சுற்றி ஓர் எதிர்ப்பு வளையத்தை உருவாக்குவதற்காகவும், அண்மை ஆண்டுகளில் இந்தியாவுக்கு இரஷ்யா ஏராளமான ஆயுதங்களை வழங்கியிருக்கிறது" என்று அது குற்றஞ்சாட்டியது.

'பிச்சை' கேட்பதற்கே அமெரிக்கா சென்றாராம்

இரஷ்யாவிடம் மேற்கொண்டு இராணுவ உதவியும், சாதனங்களையும் தருமாறு 'பிச்சை' கேட்பதற்காகவும், சீனவுக்கு எதிராக இராணுவ ரீதியில் இரஷ்யா இந்தியாவின கூட்டுச் சதியை தீவிரமாக்குவதற்காகவுமே சுவரண் சிங் மாஸ்கோவுக்குச் சென்றார்" என அது கூறியது.

கைதிகளிடை தன்னம்பிக்கை — தன்னுறுதியை உருவாக்கத் திட்டம்

தமிழக அரசின் சீரிய முயற்சி

பண்ணைகளுடன் கூடிய மூன்று திறந்தவெளிச் சிறைச்சாலைகள் மூன்று மாவட்டங்களில் அமையும்

சென்னை, நவ. 5—

நீண்டகாலத் தண்டனை பெறும் கைதிகளை, சிறைவாசத்தின்போது விவசாயப் பணிகளில் ஈடுபடுத்துவதற்காக அடுத்த ஆண்டு துவக்கத்தில் தமிழகத்தில், பண்ணைகளுடன் கூடிய மூன்று திறந்தவெளிச் சிறைச்சாலைகள் ஏற்படுத்தப்படும்.

விடுதலை பெற்ற பிறகு அவர்கள், ஒழுங்கான வாழ்க்கை நடத்துவதற்கு இது உதவும் எனக் கருதப்படுகிறது.

கைதிகள், திறந்தவெளிப் பண்ணைச் சிறைச்சாலைகளில் பண்ணை வேலைகளைச் செய்யும்போது தாராளமாக நடமாட அனுமதிக்கப்படுவர்; கைதிகளிடை தன்னம்பிக்கை — தன்றுதி ஆகியவற்றை ஏற்படுத்துவது இவ்விதத் திறந்தவெளிச் சிறைச்சாலைகளை அமைப்பதன் ஒரு நோக்கமாகும்.

திறந்தவெளிச் சிறைச்சாலைகள் மூன்றும் சென்னை, தஞ்சை, மதுரை ஆகியவற்றின் அருகே அமையும். ஒவ்வோர் இடத்திலும் இதற்கென 300 ஏக்கர் நிலம் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

பெரும்பாலான கைதிகள் விவசாயத்துடன தொடர்புகொண்டவர்களாகவும், கிராமப்புறங்களை சேர்ந்தவர்களாகவும் இருப்பதால் அவர்களுக்குத் தண்டனைக் காலத்தின் போது கோழி வளர்ப்பு, குடிசைத் தொழில்கள், விவசாயம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தற்போது தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில், சமூகக் குற்றங்களைச் செய்த சுமார் 2,50,000 கைதிகள் பல்வேறு கால அளவிலான சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

சிறை நிர்வாகம் மற்ற செலவுகளைத் தவிர்த்து அக்கைதிகளை கவனித்துக்கொள்வதற்கு மட்டும் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 1,10,000 செலவாகிறது.

கைதிகள் செய்யும் புத்தக பைண்டிங், கூடை வேலை, தச்சு வேலை, மற்றும் இதர வேலைகள் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 50 இலட்சம் கிடைக்கிறது.

வலிபோக்கப் புதிய மருந்து

அமெரிக்க நிபுணர் கண்டுபிடிப்பு

புற்றுநோயாளிகளை வாட்டும் கடுமையான வலியைப் போக்கக் கூடிய புரட்சிகரமான முறையொன்றை அமெரிக்க அறுவை மருத்துவர் ஒருவர் வியாழக் கிழமை அறிவித்தார்.

மார்பின் போன்ற வீரியம் மிக்க, ஆனால் பழக்கமாகிவிடும் கெடுதியுடைய மருந்துகளுக்கு மாற்றாக இந்த முறையைப் பயன்படுத்த முடியும் எனத் தெரிகிறது.

மணிக்கட்டில் ஒரு சிறிய சைலாஸ்டிக் பிளாஸ்டிக் சவ்வு பொருத்தப்படும். இது ஒன்றிரண்டு சொட்டு உணர்ச்சி போக்கும் மருந்தினை குருதிக்குள் பரப்பும்.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்து மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த துணை அறுவை மருத்துவர் எம். ஜூடா ஃபோச்மன் இப்புதிய மருந்தை பொறியியல், மருந்து பற்றிய உரைக்கோவை ஒன்றில் தெரிவித்தார்.

பணி இன்னும் சோதனைக்கட்டத்திலே இருக்கிறது என்று டாக்டர் ஃபோக்மன் பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் கூறினர். நாய்களிடம் இது சோதிக்கப்பட்டது என்றும் சோதனை பிரமாத வெற்றியாகியது என்றும் அவர் கூறினர். ஓராண்டுக்குள் இந்தப் புதுமுறை மனிதர்களுக்கும் பயன்படுத்திச் சோதிக்கப்படலாம் என்றார்.

"கத்திகொண்டு எலும்புவரை கீறலாம். நாய் உங்களைப் பார்த்துக்கொண்டு சும்மா விருக்கும். உணர்ச்சி போக்கும் மருந்து நாயின் உடலுக்குள் பரவிவிட்டதால் அது மிகமிக மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இருக்கக் காணலாம்" என்றார்.

பிளாஸ்டிக் பொருத்தும் முறை மனிதர்களுக்கும் நன்றாகப் பயன்படுமானல், மருத்துவமனைகளில் ஊசிபோடுவதற்காகத் தங்கியிருக்கும் புற்று நோயாளிகளையும் பிற நோயாளிகளையும் அவரவர் இல்லங்களிலேயே சிகிச்சை செய்துகொள்ளும்படி அனுப்பிவிட முடியும் என்றார்.

மனநிறைவு எதில்?

"சுதந்தர மனிதர்களாக வாழ முடியாவிட்டால், இறப்பதில் மனநிறைவு கொள்ள வேண்டும்."

—காந்தியார்

தமிழக மின்சார வாரியம்

டெண்டர் விளம்பரம்

மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் அதன் உறையில், "தமிழக மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்" கீழ்க்கண்ட வேலைகளுக்குக் கீழ்க் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில், கீழ்க் குறிப்பிட்டுள்ள நேரம்—தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

எண்	குறிப்பு எண்	வேலை விவரம்	பிணைத் தொகை	டெண்டர் பெற்றுக் கொள்ளப்படும் நேரம், தேதி
1.	SCE. 83.	மின் நிலையத்தின் கிழக்குப் பகுதியில் சுற்றுச் சுவர் கட்டுதல்	ரூ. 2,000	28—11—68 மாலை 3-00 மணி வரை
2.	SCE. 84.	மின் நிலையத்தின் மேற்குப் பகுதியில் சுற்றுச் சுவர் கட்டுதல்	ரூ. 2,000	„
3.	SCE. 85.	மின் நிலையத்தின் வட பகுதியில் சுற்றுச் சுவர் கட்டுதல்	ரூ. 2,000	„
4.	SCE. 86.	மின்நிலையத்தின் தென் பகுதியில் சுற்றுச் சுவர் கட்டுதல்	ரூ. 2 000	„
5.	SCE. 87.	அனல் மின் திட்டத்தின்—நிலத்தின் வட பகுதியிலும், தென் பகுதியிலும் இலாகாவின் தர நிர்ணயம் செய்யப்பட்ட வேலி கட்டுதல்	ரூ. 2,000	„
6.	SCE. 88.	திறந்த இரு கால்வாய்களில் இரு புறங்களிலும் இலாகாவின் தர நிர்ணயம் செய்யப்பட்ட வேலி கட்டுதல்	ரூ. 2,000	„

டெண்டர்கள் அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். பிணைத் தொகை செலுத்தப்படாத டெண்டர்களும், துறையினரைச் சார்ந்த நமூனைகளில் இல்லாத டெண்டர்களும் இறுதித் தேதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்களும் திட்டமாக நிராகரிக்கப்படும்.

டெண்டர் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10.30 (ரூபாய் பத்தும் காசுகள் முப்பது மட்டும்)—விற்பனை வரி உள்பட—கீழ்க் கையொப்பமிட்ட அலுவலகத்தில் நேராகவோ, அல்லது மணியார்டர் மூலமாகவோ, குறிப்பிட்ட டெண்டர் எண்ணுக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் டெண்டர் பத்திரங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

டெண்டர்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணங் காட்டாது நிராகரிக்கவும், வேலையை டெண்டர் தாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

டெண்டர் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

தொலைபேசி எண்: 59389
தந்தி: 'ENTERMAL'

தலைமை நிர்மாணப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தமிழக மின்சார வாரியம்

டெண்டர் அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் வழங்குவதற்கு முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பங்கள் அடியிற்கண்ட கையொப்பம் இட்டவரால் மதுரை மின் திட்டம், மதுரை-7 கோ. புதூரிலுள்ள அவரது அலுவலகத்தில் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்	டெண்டர் எண்	பொருள்களின் விவரம்	பொருள்கள் கொடுக்கப்பட வேண்டிய இடம்	தேவை	முடிவு தேதி
1.	டெண்டர் 57/68-69	எம். எஸ். பிளாட் 50 மிமி × 10 மிமி (2"×3/8")	சென்ட்ரல் ஸ்டோர்ஸ் பசுமலை	30 டன்	28-11-1968
2.	„ 58/68.69	எம். எஸ். பிளாட் 65 மிமி × 10 மிமி (2½"×3/8")	ஷை	30 டன்	ஷை
3.	„ 59 „	எம். எஸ். பிளாட் 75 மிமி×10 மிமி (3"×3/8")	ஷை	30 டன்	ஷை
4.	„ 60 „	எம். எஸ். பிளாட் 50 மிமி × 6 மிமி (2"×¼")	ஷை	30 „	ஷை
5.	„ 61 „	எம். எஸ். பிளாட் 75 மிமி× 6 மிமி (3"×¼")	ஷை	30 „	ஷை
6.	„ 62 „	ஜி. ஐ. பைப் 20 மிமி (3/4")	ஷை	6000 மீட்டர்	29-11-1968
7.	„ 63 „	ஜி ஐ. பைப் 25 மிமி (1")	ஷை	6000 „	ஷை
8.	„ 64 „	„ 50மிமி (2")	ஷை	2000 „	ஷை
9.	„ 65 „	„ 65 மிமி (2½")	ஷை	1500 „	ஷை
10.	„ 66 „	பியூஸ் யூனிட் 15 ஆம்ஸ் 500வோல்ட்	ஷை	1500டஜன்	ஷை
11.	„ 67 „	பியூஸ் யூனிட் 30 ஆம்ஸ் 500வோல்ட்	ஷை	1000 „	ஷை
12.	„ 68 „	கட்அவுட் 15 ஆம்ஸ் 500வோல்ட்	ஷை	1500 „	ஷை
13.	„ 69 „	கட்அவுட் 30 ஆம்ஸ் 500 வோல்ட்	ஷை	1000 „	ஷை
			கம்பம் செய்யுமிடம்		
14.	„ 70 „	7.32 மீட்டர்கள் (24 அடி) உயர ஆர்.சி. சி., கம்பம் மூலப் பொருள்கள் (கம்பிகளும் சிமெண்ட் டிபார்ட்மெண்ட் மூலம்) மட்டும் கொடுத்துச் செய்ய	திருப்பரங் குன்றம்	1000 „	30-11-1968
15	„ 71 „	ஷை	திருமங்கலம்	1000 „	„
16.	„ 72 „	ஷை	தேனி	1000 „	„
17.	„ 73 „	ஷை	உசிலம் பட்டி	1000 „	„
18.	„ 74 „	ஷை	ஒட்டன் சத்திரம்	1000 „	„
19.	„ 75 „	ஷை	திண்டுக்கல்	1000 „	„
20.	„ 76 „	ஷை	மேலூர்	1000 „	„
21.	„ 77 „	பி. டைப் பாக்ஸ்	சென்ட்ரல் ஸ்டோர்ஸ் பசுமலை	800 எண்	„
22.	„ 78 „	2×20 வாட் குழல் விளக்குகள்	ஷை	3000 எண்	„

டெண்டர் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிகளுக்கும் ரூ. 5.00 ஆகும். மேற்படி டெண்டர் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ 5.00 (ஐந்து ரூபாய் மட்டும்) வீதம், 'தலைமைக் கணக்கர் (செலவுப் பிரிவு), மதுரை மின் திட்டம். கோ. புதூர், மதுரை-7' என்ற முகவரிக்குப் பண அஞ்சல் அல்லது நேரிலேயோ செலுத்தி 8—11—68 தேதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. இத்தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய சாற்றுக் குறிப்பு எண்ணையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவருக்கு சரியாசப் பட்டுவாடா செய்யாமலிருந்தால் அதற்கு மின் வாரியம் பொறுப்பு அல்ல.

உரிய தாள்களில் சேர்க்கப்படாத விலை ஒப்பங்களும், குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலை ஒப்பங்கள் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3-மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பங்களையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

சூப்பரிண்டெண்டிங் எஞ்சினீயர்,
மதுரை மின் திட்டம், மதுரை-7

காந்தியார் கொள்கைக்குக் காங்கிரசார் தரும் மதிப்பு!

மதுவிலக்கை செயல்படுத்த கடும் எதிர்ப்பு!

காந்தி நூற்றுண்டு விழாக் கொண்டாடத் தீர்மானமாம்!

குன்கா நகர் (பனுஜி), நவ. 5—

இங்கு நேற்று கூடிய அனைத்திந்தியக் காங்கிரசு செயற்குழுக் கூட்டம், மதுவிலக்குப் பற்றி மூன்று மணி நேரம் விவாதித்தும், மதுவிலக்குப் பற்றிய தீர்மானத்தை ஏற்பதா, இல்லையா என்பது பற்றி எவ்வித முடிவும் எடுக்கவில்லை.

இன்று இங்கு துவங்கும் இரண்டு நாள் அனைத்திந்திய காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றக் கோரி, மதுவிலக்குப் பற்றிய தீர்மானம் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது; 'நாடு முழுவதிலும் முழு மதுவிலக்கைச் செயல்படுத்துவதற்குரிய காலக் கெடுவை நிர்ணயிக்க வேண்டும்' என்று அந்தத் தீர்மானம் கோருகிறது.

இந்தத் தீர்மானத்தைப் பற்றிச் சூடான விவாதம் நடைபெற்றது. மேலிடத்தின் முதிர்ந்த தலைவர்களிடையேகூட, இந்தப் பிரச்சினையில் கருத்து வேற்றுமைகள் நிலவின; குறிப்பாக, மொரார்ஜி தேசாய் போன்ற தலைவர்களுக்கும் -- முதலமைச்சர்களுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது.

"நிர்வாகத்தை மட்டும் கருத்தில் கொண்டு பார்க்காமல் பொருளாதாரக் கண்ணோட்டத்துடனும் இப்பிரச்சினையை அணுக வேண்டும்" என்று முதலமைச்சர்கள் விவாதிட்டார்களாம்.

இப்பிரச்சினையில் செயற்குழு எவ்வித முடிவுக்கும் வராததால், மீண்டும் இன்று பகிரங்கக் கட்டத்தில் இதே பிரச்சினையை விவாதிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

பனுஜி ஜிம்கானுவில் நடைபெற்ற இக்கூட்டத்தில், விவாதம் நடைபெற்றபோது, வெளியில் இருந்தவர்களுக்குக்கூட காதில் விழும் அளவுக்கு விவாதம் கடுமையாக இருந்தது. குறிப்பாக, மொரார்ஜியின் குரல் வெளியில் மிகவும் தெளிவாகக் கேட்டது. இந்தத் திர்மானத்தைக் கிடப்பில் போடுவதற்கு அவர் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தெரிகிறது.

மொரார்ஜியின் குரலுக்குச் சமமாக மற்ஞெரு முதலமைச்சரின் குரல் கேட்டது; 'மதுவிலக்கைச் செயல்படுத்திஞல், குடிநீர்ப் பிரச்சினை போன்ற திட்டங்களுக்குப் பணத்துக்கு எங்கே போவது?' என்று அவர் கேட்டதாகத் தெரிகிறது.

மதுவிலக்குக் கொள்கையைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டு, அதே நேரத்தில் அதனைச் செயல்படுத்துவதில் உள்ள சங்கடங்களைக் கருத்தில் கொள்ளும்வகையில் ஒரு பனதான தீர்மானத்தை நிறைவேற்றச் செய்யத் திரைமறைவில் முயற்சி நடப்பதாகத் தெரிகிறது.

விவாதத்தில் கலந்துகொண்டவர்களில் முதலமைச்சர்கள் உட்படப் பெரும்பாலோர், முழு மதுவிலக்கிற்கான நாள் குறிப்பிடுவதை எதிர்த்தனர்.

சில மாநிலங்களில்--குறிப்பாக மகாராட்டிரத்தில் செய்யப்பட்டுள்ளதுபோல் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்துவது அல்லது அளவோடு குடிக்க அனுமதிப்பது போன்ற யோசனை கூறப்பட்டது; இதிலும் கருத்து வேற்றுமைகள் நிலவின.

இந்தப் பிரச்சினையில் ஒரு சமரச முடிவு ஏற்படும் என்று இன்னமும் சொல்வதற்கில்லை.

'முழு மதுவிலக்குக்கு நாள் குறிப்பிட வேண்டும்' என்று விரும்புபவர்கள், 'ஏற்கனவே இராஜஸ்தானில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதுபோல் மூன்ருண்டுத் தவணையில் நாள் குறிப்பிடலாம்' என்று கருதுகின்றனர்.

மற்றும் சிலர், 'ஐந்தாண்டுத் தவணை கொடுக்கலாம்' என்று கூறுகின்றனர்.

ஆனல் பெரும்பாலான உறுப்பினர்கள், ஒரு குறிப்பிட்ட காலவரை நிர்ணயிப்பதன் மூலம், காங்கிரசு அரசுகளை ஒரு நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்க விரும்பவில்லையாம்,

கூட்ட முடிவில், காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா செய்தியாளர்களிடம் பேசுகையில், 'மதுவிலக்குப் பற்றி விவாதிக்க ஒரு முழு நாள் ஒதுக்கப்படும்' என்ருர்.

செயற்குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், மதுவிலக்குக்கு நாள் குறிப்பிடுவதை விரும்பவில்லை என்று நிஜலிங்கப்பா கூறினர்.

காந்தியாரின் உயிர்க் கொள்கையான மதுவிலக்கை முழு அளவில் செயல்படுத்த விரும்பாத பெரும்பாலான காங்கிரசுக்காரர்கள் அடங்கிய இந்தக் கூட்டத்தில், காந்தியாரின் நூற்ருண்டு விழாத் தொடர்பான திர்மானமும் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

இன்னல் நேரிடும்!

"மற்றவர்களைப் பற்றித் திர்ப்புக் கூற வேண்டாம்; உங்களைப் பற்றித் திர்ப்புக் கூறவேண்டும்; அப்போதுதான், உண்மையில் மகிழ்ச்சியடைய முடியும்; மற்றவர்களைப் பற்றித் திர்ப்புக் கூற முயன்ருல் இன்னலைத் தேடிக் கொள்ள நேரிடும்."

—காந்தியார்

முருகு பாண்டியன்

கலை நிகழ்ச்சிகள்

நவ. 8: ஆவாரம்பாளையம்; 9, 10, 11: கோவை நகரம்; 12: வெள்ளக்கோவில்; 13: சாலைபுதூர்; 14: முடுக்கன்துறை (பவானி சாகர்); 15: கோவை; 16, 17, 18, 19: உதகை நகரம்.

முகவரி மாற்றம்

சு. தென்கோவன்,
31, மானந்தியார் தெரு,
திருவாரூர்

வருக அண்ணு வருக!

[வெ. கலைக்கூத்தன்]

உழைக்கின்ற பாட்டாளி உள்ளத்திலே நின்று
உயர்கின்ற ஏந்தலே வருக!— கூடித்
தழைக்கின்ற பாதையில் தம்பிகள் நடைபோடத்
தருநிழற் சாந்தமே வருக!
அன்புக்கு நோய்வெல்லும் ஆற்றலுண் டென்பதை
அவனியே உணர்ந்தது பாராய்!— கோடித்
துன்புற்ற உள்ளங்கள் துயர்நீக்கிப் பயமோட்டித்
துலங்குமறு பிறப்பானுய் சீராய்!

பயமென்ற சொல்லுக்குப் பொருள்மாற்றி எல்லோரும்
பயன்காணப் பயன்தந்த பயனே!—அன்பு
நயம்சிந்தும் கோலாக 'நா'க்குறள் நூலாக
நயமாக நாடாளும் நயனே!
மதம்சாதிச் சேற்றினுள் மாண்புக ளழியுங்கால்
மதிதந்த மதியாளா வருக!— ஏழைப்
பதம்கண்ட குரிசிலே பகைவெல்லும் தானைக்குப்
பயில்பண்பு நிதியள்ளித் தருக!

நோய்நம்மைப் பிரித்தது நூருயிரம் காதம்
நோன்புற்ருேம் பலகோடிப் பேர்கள்—இங்கு
காய்கின்ற உள்ளமும் வழக்கிற்கு மாருகக்
கனிந்தது தான்சற்று சீர்கள்!
தாய்தேடும் சேய்களாய் தமிழ்தேடும் புலவோராய்த்
தவிக்கின்ருேம் அண்ணலே வருக!— தங்கள்
வாய்சிந்தும் சொல்மறை வழிசெல்லும் இளமோர்கள்
வழிநோக்கி ஏங்கிளுேம் வருக!

அங்கந்த நாட்டினில் அன்பைக் குழைத்தூட்டி
அருமுயிர் காத்தவரை வாழ்த்தித்— தமிழர்
எங்கெங்கு வாழ்ந்தாலும் ஏதுற்றுத் தாழ்ந்தாலும்
இயல்நன்றி மறந்திடோம் வருக!
தண்ணுவே தமிழாகும் தமிழ்நோக்கே தானுகும்
தமிழ்த்தாயின் பண்பார்ந்த மகனே—எங்கள்
அண்ணுவே காக்கின்ற அன்பூறும் சுனையேதேன்
அறிவூறும் மாமலையே வருக!

அமைச்சர் சத்தியவாணிமுத்து

நவம்பர் 24-ல் சென்னை திரும்புகிருர்

சென்னை, நவ. 5—

தற்போது இலண்டனில் தங்கியுள்ள தமிழகச் செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, நவ 10-ஆம் நாள் பாரிசுக்குச் செல்கிருர்; அங்கிருந்து நவ. 14-ஆம் நாள் மிலானுக்குப் புறப்பட்டுச் சென்று நவ. 15-ஆம் நாள் வெனிசுக்குச் செல்கிருர்; அடுத்த நாள் ரோம் அடைவார். நவ. 19-ஆம் நாள் வரை ரோமில் தங்கியிருந்துவிட்டு கெய்ரோ சென்று அங்கிருந்து நவ. 21-ஆம் நாள் பெய்ரூட்டுக்குப் புறப்படுகிருர்; பெய்ரூட்டிலிருந்து நவ. 23-ஆம் நாள் புறப்பட்டு 24-ஆம் நாள் சென்னை வந்தடைகிருர்.

வேளாண்மை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

முகவரி மாற்றம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி,
'திருவரங்கம்', கிரீன்வேய்ஸ்,
அடையாறு, சென்னை
தொலைபேசி எண் : 71850

காங்கிரசல்லாத முதல்வர்கள் மாநாடு

போபால், நவ. 5—

இடைக் காலத் தேர்தல்கள் நடக்கும் மாநிலங்களில் காங்கிரசுக்கு எதிராகக் கூட்டணி நிறுவும் வாய்ப்புகளை ஆராய காங்கிரசல்லாத முதலமைச்சர்கள் -- கட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டுவதில் மத்தியப் பிரதேச சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி முனைந்திருக்கிறது.

"தேர்தல்களில் எதிர்க் கட்சிகளிடை ஓட்டுகள் சிதையாமலிருக்கவும், காங்கிரசுக்கு எதிரான உணர்ச்சி நிலை பெறச் செய்யவும், இம்மாநாடு உதவும்" என்று ஒரு ச. சோ. பிரமுகர் கூறினர்.

ரோஜா
பாக்கு & புகையிலை
REGD. No. ROJA
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

நகராட்சித் தேர்தல்

வாக்காளர் பட்டியல் திருத்தம்

சென்னை, நவ. 4—

தமிழகம் முழுவதிலுமுள்ள 84 நகராட்சிகளுக்கும் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் தேர்தல் நடைபெறவிருப்பதால் வாக்காளர் பட்டியல்களில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

• நகராட்சிகளின் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலின் நகல், நவம்பர் மாதம் 18-ம் நாள் வெளியிடப்படும்.

தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர் இலாமற்போனுலும், புதிதாக வாக்காளராக விரும்பினுலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுச்செய்து பட்டியலில் பெயரைச் சேர்த்துக்கொள்ளலாம்.

டிசம்பர் 18-ம் நாள் வரை வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

செங்கற்பட்டு நகரக் கழகத் தோழர்கட்கு :

"1969-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெறவிருக்கும் நகராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்ற வாக்காளர்களின் பட்டியல்கள் அந்தந்த வட்டக் கிளைச் (வார்டு) செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

"வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர் பெயர்களைச் சேர்க்கவோ, வேறு திருத்தங்கள் செய்யவோ விரும்புவோர் 25—11—68-க்குள் நகரச் செயலாளருக்கு விவரம் அனுப்பிவைச்க வேண்டப்படுகிருர்கள்.

"வாக்காளர் பட்டியலில் புதிதாகச் சேர்க்க வேண்டியவர்களுக்குத் தேவையான விண்ணப்பத்தாள்கள் தனியாக அந்தந்த வார்டு கிளைச் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

"செங்கற்பட்டு நகரத்திலுள்ள கழகத் தோழர்களின் துணையோடு உடனடியாக அந்தந்த வார்டு கிளைச் செயலாளர்கள் மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டு வாக்காளர் பட்டியல் திருத்தி அமைக்கப்படுவதற்கு உறுதுணை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என, செங்கற்பட்டு நகர தி. மு. க. செயலாளர் கோ. ஆலாலசுந்தரம் அறிவிக்கிருர்.

முதலீடு

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரசாயன உரத் தொழிலுக்கான மொத்த முதலீடு ரூ. 1,403-கோடியாக இருக்கும்.

இதில் அரசுத் துறைக்கு ரூ. 836.5 கோடியும், தனியார் துறைக்கு ரூ. 566.5 கோடியும் முதலீடு இருக்கலாம்.

மொத்த முதலீட்டில் ரூ. 371 கோடிவரை வெளிநாட்டுச் செலாவணி தேவை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

5-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்தொழிலுக்கான முதலீடு ரூ. 750 கோடியாக இருக்குமென்றும், ரூ. 150 கோடி வரை வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.